# செய்திக் குறிப்பு

புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் மத்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதிநல்கை பெற்று எதிர்வரும் 14.12.2011 முதல் 23.12.2011 வரையான பத்து நாட்களுக்குத் தமிழாராய்ச்சி மாணவர்களுக்குத் "தொல்காப்பிய எழுத்து, சொல் இலக்கண மரபும் சங்க இலக்கியமும்" எனும் தலைப்பில் பயிலரங்கு ஒன்றை நடத்தவிருக்கிறது.

இப்பயிலரங்கின் தொடக்க விழா 14.12.2011 புதன் கிழமை காலை 10.30 மணிக்கு லாசுப்பேட்டை மகளிர் தொழில்நுட்பக் கல்லூரி கருத்தரங்க அறையில் நடைபெற உள்ளது. புதுச்சேரி முதல்வர் திரு ந. ரங்கசாமி அவர்கள் பயிலரங்கைத் தொடங்கி வைக்கிறார். அத்துடன் செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் நிதி உதவியுடன் பதிப்பிக்கப்பட்ட 'பண்பாட்டியல் நோக்கில் பண்டைத் தமிழர் சமய மரபுகள்' எனும் நூலையும் வெளியிடுகிறார்.

பயிலரங்கத் தொடக்க விழாவில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் பதிவாளர் பேராசிரியர் மு. முத்துவேலு தலைமையேற்கிறார். லாசுப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் முதல்வரின் பாராளுமன்றச் செயலர் திரு மு. வைத்தியநாதன் அவர்களும் காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு மைய இயக்குநர் முனைவர் ஓ.பி. ஷைமா அவர்களும் வாழ்த்துரை வழங்குகிறார்கள். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன மொழியியல் துறைத் தலைவர் பேராசிரியர் இரா. கோதண்டராமன் பயிலரங்க மையக் கருத்துரை வழங்குகிறார்.

பயிலரங்கில் பயிற்சி பெற புதுவை, தமிழகம், புதுடெல்லி ஜவகர்லால் நேரு உள்ளிட்ட பல்வேறு பல்கலைக்கழகங்களிலிருந்து ஐம்பது டாக்டர் பட்ட ஆராய்ச்சியாளர்கள் பங்கேற்கிறார்கள். பல்வேறு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த தலைசிறந்த பேராசிரியர்களும் உயராய்வு நிறுவனங்களைச் சேர்ந்த அறிஞர்களும் ஆய்வாளர்களுக்குப் பயிற்சியளிக்கின்றனர்.

பயிலரங்கின் நிறைவு விழா 23.12.2011 அன்று மாலை நடைபெறுகின்றது. அதில் கலை, பண்பாட்டுத் துறைச் சிறப்புச் செயலர் திரு. ராகேஷ் சந்திரா பங்கேற்றுப் பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ்களையும் ஆய்வு நூல்களையும் வழங்குகிறார். பயிலரங்கத்தின் நிறைவுரையை ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் இந்திய மொழிகளின் துறைத் தலைவர் பேராசிரியர் கி. நாச்சிமுத்து வழங்குகிறார்

தொல்காப்பியம் தமிழின் முதல் இலக்கண நூல். அதன் கோட்பாட்டுப் பின்புலத்திற்குச் சங்க இலக்கியங்கள் அடிப்படையாக அமைந்துள்ளன. எனவே சங்க இலக்கியத்தையும் தொல்காப்பியத்தையும் மொழியியல் . நோக்கில் நன்கு புரிந்து கொள்ளவும் கற்பிக்கவும் இப்பயிலரங்கம் துணைசெய்யும்.

பயிலரங்க ஏற்பாடுகளை நிறுவன இயக்குநர் பக்தவத்சல பாரதியும் ஒருங்கிணைப்பாளர்கள் த. பரசுராமன், க. ரவிசங்கர் ஆகியோரும் கவனித்து வருகின்றனர்.